1st November 1958]

Sea erosion in Dhanushkodi area

* 776 Q.—Sri P. U. SHANMUGAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

தனுஷ்கோடி பகுதியில் கடல் அரிப்பைத் தடுத்து நிறுத்த சர்க்கார் ஏதேனும் திட்டம் வகுத்துள்ளார்களா ?

The Hon. Sri P. KAKKAN : No scheme to prevent sea erosion at Dhanushkodi has so far been formulated pending the results of investigation carried out by the Government of India in Dhanushkodi and the opinion of the Expert Technical Committee appointed by them for selecting an alternative site for their pier at Dhanushkodi owing to constant sea erosion at the place. The Government are in correspondence with the Government of India.

Sri P. U. SHANMUGAM : தனுஷ்கோடிப் பகுதியில் ஏற்படும் கடல் அரிப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கையை உடனடியாக எடுக்காவிட்டால், இன்னும் சில ஆண்டுகளுக்குள்—இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள்—ரயில்வே ஸ்டேஷன் வரையில் கடல் வந்துவிடும் என்று சர்க்காருக்குத் தெரியுமா ? தெரிந்திருந்தும் உடனடியாக நடவடிக்கை எடுக்காமல் குழுவின் பரிசீலனையில் இருக்கிறது என்று தள்ளிப்போடுவது முறை தானா ?

The Hon. Sri P. KAKKAN : அதுபற்றி ஏற்கனவே இந்த அரசாங்கம் மிகவும் அக்கறையோடு கவனித்து வருகிறது. ஆனால், அங்கே அலையின் வேகத்தினால் தண்ணீர் ஊருக்குள் வந்து அங்கேயிருக்கும் குடிசைகளைப் பாதிப்பதினால், அந்தக் குடிசைகளை இப்பொழுது வேறு இடத்திற்கு மாற்றுவது நல்லது என்ற நோக்கத்துடன் பிரதம இன்ஜினீர் அவர்கள் சிபார்சு செய்திருக்கிறார்கள். இப்பொழுது தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமென்றால், 1,150 அடி நீளத்திற்குக் கட்டவேண்டியிருக்கும். அப்படிக் கட்டினாலும் அது நிலைக்குமா என்று சந்தேகப்படுவதினாலே நிபுணர் கமிட்டியைக் கலந்துகொண்டுதான் இதைக் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டு மென்று சொல்லியிருக்கிறார்கள்.

Sri A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, இலங்கையிலே இருக்கும் தமிழர்கள் சிந்துகிற கண்ணீர் கடலிலே கலப்பதினால் இந்த அரிப்பு ஏற்படுகிறது என்று சர்க்கார் உணருமா ?

Mr. SPEAKER : I rule this question out of order.

Sri P. U. SHANMUGAM : தனுஷ்கோடிப் பகுதியில் கடல் அரிப்பு ஏற்படுவதைத் தடுக்க கரை போடவேண்டுமென்று கேட்கிறார்களே யொழிய, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது என்ற முறையில் கேட்கவில்லை. அங்குள்ள மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதும் தேவைதான் என்றாலும், கரை போடும் விஷயத்தை முக்கியமாக எடுத்துக்கொண்டு சர்க்கார் ஏன் செய்யக்கூடாது ?

The Hon. Sri P. KAKKAN : கரை போடும் விஷயமாகத்தான் அரசாங்கம் கவனிக்கிறது. கரை போட்டாலும் அது நிலைக்குமா என்று இன்ஜினீர்கள் சந்தேகப்பட்டார்கள். அங்கு இருக்கும் பியரை வேறு இடத்திற்கு மாற்ற முடியுமா என்பதையும், அங்கு இருக்கும் சில வீடுகளை வேறு இடத்திற்கு அப்புறப்படுத்த ஏற்பாடு செய்யவேண்டுமா என்பதையும் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள்.